## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC.622/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW- 3/LW-3 | Village | : திருப்பனந்தாள் |
| Name | : மணிகண்டன் | Age | :26 |
| Father's/Husband's Name | : முருகன் | Taluk | : திருவிடைமருதூர் |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்த அதிகாரியின் பதவி என்னவென்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த மறுநாள் காலை விசாரித்தார். நானும் பிரபாகரனும் 50 மீட்டர் இடைவெளியில் சென்று கொண்டிருந்தோம். இருவரும் நடந்து சென்றோம். பிரபாகரன் எனது பெரியப்பாவின் மச்சான். எந்த வெளிச்சத்தில் சம்பவத்தை நான் பார்த்தேன் என்றால் தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்த்தேன். சம்பவம் நடந்த தெரு மக்கள் அதிக நடமாட்டம் உள்ள தெரு. வேறு யாரும் பொதுமக்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை. வாஞ்சிநாதன் பிரபாகரனின் அண்ணன். தரையிலும் நான் உடுத்திருந்த உடையிலும் ரத்த கறை படிந்திருந்தது. போலிசார்

விசாரணை செய்த போது நான் ரத்த கறை படிந்த உடையை கொடுத்தேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் சம்பவத்தை பார்த்திருந்தால் நான்தான் காயம்பட்டவரை மருத்துமனையில் கொண்டு சேர்த்திருப்பேன் என்றாலும் புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் அசா1க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.622/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 2/LW-1 | Village : திருப்பனந்தாள் |
| Name : கவிதா | Age : |
| Father's/Husband's Name : அறிவழகன் | Taluk : திருவிடைமருதூர் |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் திருப்பனந்தாள் உப்புகார தெருவில் குடியிருந்து வருகிறேன். உப்புகார தெருவிற்கும் சன்னதி தெருவிற்கும் சுமார் 1/2 கி.மீ. தூரம் இருக்கும். சன்னதி தெருவில் அரசு மேல்நிலைபள்ளி. அரசு அலுவகலம், காவலர் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தெருவில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் இரவு 8 மணிக்கு மேல் இருக்காது. இந்த வழக்கின் சாட்சி மணிகண்டன் எனது கணவரின் தம்பி மகன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை வீட்டிலும் திருப்பனந்தாள் அரசு மருத்துமனைனையிலும் விசாரித்தார்கள். நான் போலிசார் விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும்

சொல்லியுள்ளேன். எனது தம்பிக்கும் எதிரிக்கும் நான் சொன்ன நாள் நேரத்தில் நடக்கவில்லை என்றாலும் எனது தம்பிக்கு எதிரியால் காயம் ஏற்படவில்லை என்றாலும் புகார்தாரர் எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**